**செய்தி வெளியீடு எண்: 598** **நாள்: 09.10.2012**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று **(9.10.2012)** தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான நியூசிலாந்து நாட்டின் தூதர் மேதகு திருமதி. ஜான் ஹன்டர்சன் அவர்கள் (H.E. Mrs. Jan Henderson, New Zealand High Commissioner) மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

இச்சந்திப்பின்போது, மருத்துவம், தொலைதூர மருத்துவ சேவை, பால்வளம் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் தமிழக அரசுடன் நியூசிலாந்து அரசு இணைந்து செயல்பட வேண்டும் என்ற விருப்பத்தினை இந்தியாவிற்கான நியூசிலாந்து நாட்டின் தூதர் மேதகு திருமதி. ஜான் ஹன்டர்சன் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், தொழில்துறை முதன்மைச் செயலாளர், ரானே குழும நிறுவனத்தின் தலைவரும், நியூசிலாந்து நாட்டின் தென் மாநிலங்களங்களுக்கான கௌரவத் தூதருமான திரு. எல். கணேஷ் அவர்கள் (Thiru L. Ganesh, Chairman, Rane Group of Companies & Honorary Consul for New Zealand in Southerns States) ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * * * *

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 9.10.2012